மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மணி 2 ★ 10-7-60 ★ ஒலி 36

நாட்டு மக்கள் எரிமலையாகி விட்டனர்!

ஆட்சியாளர்கள் மோதினால் தூள், தூளாகி விடுவர்!

ஒலி பெருக்கிகளைத்தான் கட்டுப்படுத்த முடியும்? கொதித்தெழுந்துவிட்ட மக்களையும்கட்டுப்படுத்த முடியுமா?

ஆட்சியாளர்களுக்கு சம்பத் அறிவுரை

5வேது வட்டம் ஆயிரம்விளக்கு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழுவின் சார்பில் 31-6-60ம் தேதி மாலை அசிஸ்முல்க் 2வது கிராஸ் தெருவில் தோழர் அ. கு. தாமோதரம் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள்; பாஸ்கரன், கோபால், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் வஹாப், "நம் நாடு" துணை ஆசிரியர் ஆர். எஸ். பாண்டியன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன் ஆகியவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றியும், கழகத்தின் வளர்ச்சியைப் பற்றியும், எதிரிகள் தூற்றல் பற்றியும் விளக்கமாகப் பேசினார்கள்.

பின் நீண்ட கை ஒலிகளுக்கிடையே முன்னேற்றக் கழகத்தின் போர்க்குழுத் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியது வருமாறு.

அன்புள்ள தலைவர் அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இன்று இந்த வட்டத்தில் நடைபெறும் இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் உங்களையெல்லாம் சந்தித்துப் பேசும் வாய்ப்பினை இந்த வட்டாரத்து மக்கள் நல்கியதற்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நீங்கள் நடந்து கொண்ட முறையையும், நீங்கள் காட்டிய ஆர்வத்தையும் பார்க்கின்ற போது நமது நாடு மிக விரைவில் விடுதலை அடைந்து விடும் என்பதற்கு நீங்கள் அத்தாட்சியாகி விட்டீர்கள்.

நம்முடைய கூட்டங்கள் நடைபெறும் போது நான் பார்த்திருக்கிறேன் கொஞ்சம் லேசாக மழை பெய்தாலும் சிறிதாக தூறினாலும் கூட்டங்களில் உட்கார்ந்திருக்கும் நீங்கள் முன்பெல்லாம் எழுந்து மூலைக்கொருவராக ஓடி உங்களுடைய பொன்னான மேனிகள் நனைந்து விடுமோ, கரைந்து விடுமோ, கெட்டு விடுமோ என்று கருதி துடி துடித்து அங்கும் இங்குமாகச் சுற்றித் திரிவீர்கள். இன்று நீங்கள் அவ்விதம் செய்யாது மிகக் கட்டுப்பாடுடனும் ஆர்வத்துடனும் நடந்து கொண்டீர்கள்.

இங்கு மழை பெய்தும் அதைப் பொருட்படுத்தாது அமைதியாக இருந்ததுடன், மழை பெய்தாலும் சரி, காற்றடித்தாலும் சரி, புயல் வீசினாலும் சரி, எந்த வித ஆபத்து நேரிட்டாலும் எதுவும் நடக்காதது போல் காட்டி உங்களுடைய விடுதலை வேட்கையையும், வீர உணர்ச்சியையும் காட்டினீர்கள் இதைப் பார்த்து நான் பெரு மகிழ்ச்சியடைந்தேன்.

இதைப் பார்க்கும் போது, இங்கு நீங்கள் நடந்து கொண்ட முறையை, கட்டுப்பாட்டைக் காணும் போது, நாம் இழந்த நமது பொன்னாடு மிக விரைவில் கிடைத்து விடுமென்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது.

நீங்கள் இவ்வளவு பெரிய மாபெரும் கூட்டத்தில் அமைதி குலையாதும், பொறுமையுடனும் உங்கள் உணர்ச்சியைக்காட்டியதற்காக உங்களைமிகவும் பாராட்டுகிறேன்.

இன்று நாட்டில் நிலவிவரும் எழுச்சியையும், ஆர்வத்தையும், நாட்டு மக்களின் உள்ளத்தில் எழும்பியிருக்கும் விடுதலை வேகத்தையும் நாட்டுப் பற்றையும் நமது அண்ணா அவர்கள் பேசுகின்ற போதானாலும் சரி, நமது தோழர்கள் பேசுகின்ற போதானாலும் சரி மிகைபடுத்தாது உள்ளதை உள்ளவாறு, கூட்டியோ, குறைத்தோ கூறாது வருகிறோம்.

இன்றைய தினம் நாட்டு மக்கள் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள மனக் கொதிப்பை சரிவர எடுத்துரைக்க முடியாது திகைப்புடனும், திணறிக் கொண்டும் இருந்து வருகிறோம் நாட்டில் இல்லாததை, நடவாததைக் கூறி மக்களிடம் கிளர்ச்சி செய்து வரவில்லை. அதற்கு தீ வைத்து வளர்த்தி வரவுமில்லை.

இன்னும் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாது தவிக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நாட்டில் நல்ல வளர்ச்சியடைந்து நாட்டு மக்களிடம் எதிர்பாராத ஆதரவையும் அன்பையும் பெற்று நல்லாதரவு பெற்று வந்திருக்கிறது.

[3ம் பக்கம் பார்க்க]

வீறு கொண்டுவிட்ட மக்களுக்கு மேடை ஏன்? ஒலி பெருக்கித்தான் ஏன்?

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 10-7-60 — ஒலி 36

51 நாட்களில் வருகிறது ஆகஸ்டு 31!

இன்னும் 51 நாட்களில் ஆகஸ்டு 31 வர இருக்கிறது!

முரசறைந்து, முப்படையைத் திரட்டி, முத்தமிழைக் காக்கப் புறப்பட்ட முக்கொடி மன்னர்களைப் போல— தருக்கர்களை ஒழிக்க தனிப்பெரும் தமிழ்ப் படை புறப்பட இன்னும் 51 நாட்கள் தான் இருக்கின்றன!

ஓடோடி வந்து, இரவாகி, பகலாகி—கொடுமையாளர்களின் கொடுஞ் சாவைப் போல் அழிந்து போகும் நாட்கள் ஐம்பத்தி ஒன்றும் முடிந்து விட்டால்—வந்து விடும் அந்த ஆகஸ்டு 31!

அந்த ஆகஸ்டு 31 வந்து விட்டால்—

கடல் கொந்தளிக்கும், காட்டாற்றில் வெள்ளம் பெருகும்!

கடுங் காற்றடிக்கும், கொடும் புயல் வீசும்!

பூமி அதிரும், செருமலைகள் சாயும்!

இடி இடிக்கும்—வானம் மின்னி மின்னி கண்ணைப் பறிக்கும்!

அக்கினிப் பிழம்பை எரிமலைகள் கக்கும்— ஆம், நிச்சயமாகக் கக்கும்! அதிலே கொடுமைகள் வெந்து சாம்பலாகி விடும்! அநீதிகள் எரிந்து தணலாகி விடும்!

இது இயற்கையின் திருவிளையாடல்! அடிமைப்பட்ட மக்கள் கொடுமை தாளாமல் செய்யும் புரட்சி! இதை யாரால் தடுக்க முடியும்? எவரால் தான் நிறுத்த முடியும்? முடியாது. முடியாது, எந்த சக்தியாலும் இதைத் தடுக்க முடியாது!

வெடிக்கும் எரிமலைகள் மீது குண்டுகளை வெடித்தால் எரிமலையா அழிந்து விடும்! ஆம், என்று யாராவது நம்பினுல் இன்னும் 51 நாட்கள் பொறுத்திருந்து பாருங்கள்— நல்ல பதில் கிடைக்கும்!

தமிழனைப் பழித்தான் ஒரு பேடி, தமிழன் வீரத்தை இகழ்ந்தான் ஒரு கோழை—அவன் நாக்கு துண்டம், துண்டம்! இது வரலாறு கூறுகிறது!

கனக விஜயனை வென்ருன், அவனைக் கல் சுமக்க வைத்தான், பத்தினிப் பெண்ணுக்கு சிலை சமைத்தான் தமிழன்! இப்படிச் செய்தானும், தமிழன்—இப்படிச் செய்பவன் தான் தமிழனும்! இதைக் கேட்டாலே உள்ளம் கொதிக்கிறது! உடலிலே ஓடும் ரத்தம் சூடேறுகிறது!

சேரனும், சோழனும், பாண்டியனும்— இப்படி மூன்று பெரு மன்னர்கள் இருந்தார்களாம்! இந்த நாட்டை அந்த மன்னர்கள் தான் ஆண்டார்களாம்!

கொடிகள் உண்டாம், படைகள் உண்டாம், கோட்டைகள் உண்டாம்—அந்த மன்னர்களுக்கு!

தஞ்சையிலே ஒரு மன்னன் இருந்தானும், திருச்சியிலே ஒரு மன்னன் இருந்தானும், மதுரையிலே ஒரு மன்னன் இருந்தானும், காஞ்சியிலே ஒரு மன்னன் இருந்தானும்!

புதுமை, அதிசயம், ஆச்சரியம், பெரும் அற்புதம்! நம்பவே முடியவில்லை!

நம்பவே முடியவில்லையா? நம்ப முடியாது தான்— நீ இன்றுள்ள நிலையில் அதை நம்ப முடியாது தான்!

கதை என்கிறாயா? வெறும் கற்பனை என்கிருயா? நீ நினைப்பதும் ஒரு விதத்தில் சரிதான்! நம்முடைய வாழ்க்கையே ஒரு கதையாகி விட்டது! ஆமாம், ஒரு பெரும் சோகக் கதையாகி விட்டது!

தஞ்சையிலே ஒரு அரசன் இருந்ததில்லை என்று கூறுகிறாய்? சோழ வம்சத்து ராஜாக்கள் குந்தி கொலு வீற்றிருந்த மண்டபத்தைப் பாரடா? மெருகு குலைந்து, அழகு குன்றி குட்டிச் சுவராய்க் கிடைக்கும் அந்த அரண்மனையைப் போய்ப்பாரடா?

சங்கத்தமிழ் வளர்த்தாண்டா தமிழன்!

"ஐயோ! சொல்லாதே! நம்முடைய பரம்பரையே பேடிகள் என்று சொல்லி விடு, கையாலாகாத கபோதிகள் என்று கூறி விடு-நம்முடைய மானமாவது காப்பாற்றப்படட்டும்!

நாம் பேடிகள், கையாலாகதவர்கள் என்று சொல்லிக் கொள்வதைவிட நம்முடைய பரம்பரையே வீரமற்ற பரம்பரை என்று சொல்லி விட்டால் உலகமாவது நம்மைத் தூற்ருமல் இருக்கட்டும்!

"தமிழன் ஒரு காலத்தில் ஆண்டான்" என்று சொல்லி பெருமைப் படாதே—"தமிழன் என்றென்றும் ஆட்சி புரிந்தவனல்ல—அடிமையாக இருந்தே பழக்கப்பட்டவன்" என்று பெருமையாகப் பேசிக் கொள்ளு! தமிழ் இனம் ஒரு அடிமை இனம் என்ற இழிச் சொல்லோடு மட்டும் போகட்டும்! ஆண்ட இனம்—அடிமைப்பட்டு விட்டது—கோழைகளாக இருந்த காரணத்தால் கொற்றத்தைப் பறி கொடுத்து விட்டது என்ற இன்னொரு அவமானச் சொல்லும் நமக்குத் தேவையில்லை!

"சேச்சே! அதெப்படி முடியும்! சேரன் இருந்தான் சோழன் இருந்தான், பாண்டியன் இருந்தான்" என்கிருயா? "அவன் இமயத்தை வென்ருன், கடாரத்தை வென்ருன்" என்கிருயா?

அப்படியானல் அந்த வீரம், அந்த தீரம் உனக்கிருக்கிறதா?

"அந்த வீரமும், தீரமும், உணர்ச்சி, எழுச்சியும் துளியும் குன்றவில்லை" என்று வீண் ஜம்பம் பேசித்

(11ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்டு 31ம் தேதி பலமான அடக்குமுறையைக் கையாளலாம் !

இங்குள்ள போலீசார் உங்கள் எண்ணம் போல் ஆடமாட்டார்கள் !

ஒரிசாவிலிருந்து போலீசையும்-ராணுவத்தையும் கொண்டு வாருங்கள் !

(சப்பத் பேச்சு)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நாட்டை ஆளுகின்ற ஆட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள மக்கள் ஆதரவையும், அதன் வளர்ச்சியையும் கண்டு உண்மையைப் புரிந்து கொள்ளாது அதன் மீது கோபம் கொண்டு தாக்கி வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் தனது தேசியப் பிரச்சினையை மக்கள் முன் வைத்து அதற்காக எல்லோருடைய ஆதரவையும், அன்பையும் பெற்றுப் டணியாற்றி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தானதோர் விடுதலைப் போராட்டத்தை ஏற்று நடத்த முடிவு செய்து அதற்கான சக்திகளைத் திரட்டி வருகிறது.

இன்ற இங்கு ஏற்பட்டிருக்கும் மகத்தான ஆபத்தை— பயங்கரத்தை நீக்க வழிவகை செய்து வருகிறது.

இந்த நாட்டில் கட்டாயமாக இந்தியைப் புகுத்தி, நாட்டையும், நாட்டு மக்களையும் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள் செய்து வரும் சூழ்ச்சியை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்த முன் வந்திருக்கிறது.

இதை இந்த மாநில அமைச்சர்கள் கண்டு கேலியும், கிண்டலும் செய்து தங்களது அறியாமையும் கோழைத் தனத்தையும் வெளிக்குக் காட்டி வருகிறார்கள்.

நமது மாநில நிதி யமைச்சர் சுப்பிரமணியம் நமது போராட்டத்தைப் பற்றி வேலூரில் ஈனக் குரலில் அலறி இருக்கிறார். அவர் தாம் வக்கீல் என்பதை காட்டிக் கொள்ள ஒரு சொத்தை வாதத்தையும், பொருளற்று பேசியிருக்கிறார்.

இந்திய அரசியல் சட்டத்தில் 10 ஆண்டுகளுக்குப் பின் இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாகுமென்று முன்பே முடிவு செய்யப்பட்டு விட்டதே அப்படி இருக்கும் போது ஏன் அதற்குப் போராட்டம் என்று ஒரு கேள்வி கேட்டுப் பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சு அவரது அறியாமையைத் தான் வெளிக் காட்டச் செய்கிறது. அவர் உண்மையை மறைத்து நாட்டுமக்களை தப்பான வழியில் தன் வசப்படுத்தலாம் என்று நினைக்கிறார். இதனால் நிதியமைச்சர் சுப்பிரமணியம் வெற்றி பெற முடியாது. மாறாக ஏமாந்து தான் போகப் போகிறார்,

நிதியமைச்சர் காமராசருக்கும், இங்கு அமைச்சர்கள் என்று கூறிக் கொண்டு, தன்மானமற்று சுதந்திரமற்று அடிமைகளாக இருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டிலுள்ள மக்கள்— நாங்கள் இந்தியை இன்று மட்டும் எதிர்க்க வில்லை. இந்த மாநிலத்தின் முதலமைச்சராக ஆச்சாரியார் 1937ம் ஆண்டு இருந்த போது இந்த மாநிலத்திலுள்ள ஆரமபப்பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த முற்பட்ட போதே எதிர்த்துள்ளோம், மற்றும் பல்வேறு சமயங்களிலும் அதை எதிர்த்துப் போரிட்டிருக்கிறோம்,

ஆச்சாரியார் ஆட்சியின் போது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இந்த நாட்டிலுள்ள தாய்மார்களும், தமிழர்களும் கலந்து 1001 பேர்களுக்கு மேல் சிறை சென்றிருக்கிறார்கள்.

அந்தப் போராட்டத்தில் தாளமுத்து, நடராஜன் என்ற இரண்டு வீரர்களைப் பலியிட்டு, பிணமாக்கி வெற்றி கண்டிருக்கிறோம். இந்த நாட்டை விட்டே அப்போது இந்தி ஓடி இருக்கிறது.

அதற்குப் பின்னும் இந்த தென்னகத்திற்கு இந்தியைக் கொண்டு வர ஆச்சாரியாருக்குப் பின் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முயற்சித்தார். இந்தியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாகக் கொண்டு வர ஏற்பாடு செய்தார். அந்த நேரத்திலும் நாம் சும்மா இருந்து விடவில்லை.

அந்த நேரத்தில் திராவிடர் இயக்கம் வீறு கொண்டெழுந்தது தனது மகத்தான எதிர்ப்பைக் காட்டியது. அந்த இந்தியைத்

(4ம் பக்கம் பார்க்க)

சட்டத்தால் எங்கள் கிளர்ச்சியை ஒடுக்கிவிட முடியாது!

சட்டத்தை உடைத்து உரிமையை நிலைநாட்டுவோம்!

(சம்பத் பேச்சு)
(3ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து ஒரு மாபெரும் போராட்டம் நடத்தியது. அதன் பயனாக ஓமந்தூரார் காட்டிய அடக்கு முறையால் கும்பகோணம் தெருவில் இரத்த வெள்ளத்தில் மிதந்தோம். போலீசார் தடி கொண்டு நம்மைத் தாக்கி இம்சித்தது. அப்படி இருந்தும் வீர உள்ளம் கொண்ட தமிழர்களாகிய நாம் பின் வாங்கவில்லை. இந்தி சொல்லாமல் பின் வாங்கி ஓடியது.

இன்று தமிழகத்தில் மீண்டும் இந்தி புகுந்த விட்டது. அதைப் பற்றி இங்குள்ள அமைச்சர்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்து வருகிறார்கள்.

காமராசரும், சுப்பிரமணியமும், இந்த நாட்டில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த விட மாட்டோம். தாய் மொழிக்கு ஆபத்து நேரும்படி நடந்து கொள்ள மாட்டோம் என்றெல்லாம் இந்த நாட்டு மக்களிடம் கூறி பசப்பு வார்த்தை பேசி வந்தார்கள். ஆனால் இன்று கேவலமான முறையிலும், கயமைத்தனமான முறையிலும் இந்தி புகுந்திருக்கிறது.

அன்று வீரமாகப் பேசி வந்த நிதி யமைச்சர் சுப்பிரமணியம் வியாக்கியானம் செய்து மழுப்பப் பார்க்கிறார்,

வேலூர் கோட்டை மைதானத்தில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சுப்பிரமணியம் பேசும் போது கூறுகிறார்.

"என்றிருந்தாலும் இந்தியைக் கற்றுத் தானே ஆக வேண்டும் இப்போது எதிர்ப்பதால் என்ன பயன்?" என்று.

இம்மாதிரி கேட்கின்ற நிதி யமைச்சர் சுப்பிரமணியம் இரண்டு மாதங்களுக்கு முன் என்ன செய்தார்.

சென்னை மாநில சர்க்காரின் அபிப்பிராயம் என்ற பெயரால் என்ன நடவடிக்கைகளைக் கையாண்டார் என்பதை மறந்து விட்டாரா?

பல கட்சிகளின் அபிப்பிராயத்தையும் அறிந்து ஒரு மெமோரண்டத்தை அனுப்பினார். ஆங்கிலத்தை நீக்கக் கூடாது. ஆங்கில கால வரையின்றி நீடிக்க வேண்டும் உயர் நீதி மன்றங்களிலும், மற்று நீதி ஸ்தலங்களிலும் ஆங்கிலமே இருக்க வேண்டும் என்று மத்திய அரசினருக்கு, நேரு சர்க்காருக்கு, கோவிந்த வல்லபந்துக்கு அனுப்பினார் ஏன் அனுப்பினார். இவருக்குத் தான் இந்தி ஆட்சி மொழியாகு மென்று முன்பே தெரியுமே பின் ஏன் இதை யெல்லாம் செய்தார். அன்று இந்த நடவடிக்கை எடுத்தவர் இப்போது இப்படிப் பேசுவதற்குக் காரண மென்ன?

1965க்குப் பின் இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழி என்று தெரிந்த பின், அரசியல் சட்டத்தை மீறி நேரு மக்கள் சபையில் இந்தி பேசாத மக்களின் அபிப்பிராய மறியது. இந்தி ஆட்சி மொழியாகாது என்றார்.

எப்படி வாக்குறுதி கொடுத்தார் அப்படி இருந்தும் இன்று அவைகளை யெல்லாம் மீறி இந்தி 1965க்குப் பின் ஆட்சி மொழி என்று கூறி விட்டார்கள்.

இந்த மாநில அமைச்சர்களையும் அவமதித்து விட்டார்கள். இதைத் தட்டிக் கேட்க. இங்குள்ள வீரர்களான காமராசர், சுப்பிரமணியத்திற்கு-மறுத்துப் பேசவோ, தட்டிக் கேட்கவோ தைரியமில்லை—நெஞ்சுறுதியில்லை. நம்மிடம் வந்து வீரத்தைக் காட்டுக்கிறார்கள்.

வேலூரில் சட்டையை மடித்துக் காட்டி வீரம் பேசும் சுப்பிரமணியம் மத்திய சர்க்காரிடம் ஏன் வீரத்தைக் காட்டவில்லை,

பதவிமேலுள்ள ஆசையாலா? அல்லது பயத்தாலா?

இவர்களை மத்திய அரசினர் மனிதர்களாக மதிக்க வில்லையே இவர்களை நெல்லில் விளைந்த பதராக—கருக்காயாகத் தானே மதிக்கிறார்கள்!

இந்த மானமற்றவர்கள் எந்த முகத்தை வைத்து நம்மிடம் வீராப்புப் பேச வந்து விட்டார்கள்.

எனக்கு முன் பேசிய கண்ணதாசனும், பாண்டியனும் இந்திய சட்ட மந்திரி இந்தி விஷயமாக விடுத்துள்ள அறிக்கையைப் பற்றிப் பேசினார்கள்

இன்று மாலை வந்துள்ள "மெயில்" பத்திரிகையில் அந்த அறிக்கை வந்திருக்கிறது.

ஆங்கிலத்தில் இருந்து வருகின்ற சட்டங்களை யெல்லாம் இந்தி மொழியாக்க வேண்டும் அதற்கான சொற்களை அமைக்க வேண்டும் அந்த வார்த்தைகளைக் கண்டு பிடிக்க ஒரு குழு நியமிக்க வேண்டும் இனி நீதி மன்றங்களில் இந்தியைத் தான் உபயோகப் படுத்த வேண்டும் அதற்கான சொற்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சட்ட மந்திரி ஆணையிட்டிருக்கிறார்.

இது சட்ட மந்திரியின் இஷ்டப்படி நடப்பதல்ல. இது குடியரசு தலைவரின் ஆணைப்படி செய்வது தான்.

குடியரசு தலைவரின் தாக்கீது வந்த பின் உள்நாட்டமைச்சர் கோவிந்த வல்லபந்த் கல்வி அமைச்சரையும் அழைத்து எல்லா நடவடிக்கைகளையும் இந்தியில் நடத்த வேண்டு மென்று ஆகஞை பிறப்பித்திருக்கிறார்.

இந்தியில் வார்த்தைகளை உற்பத்தி செய்ய வேண்டு மென்றால் என்ன பொருள்? தொழிற்சாலையிலிருந்து சாமான்களை உற்பத்தி செய்வது போன்று உற்பத்தி பண்ணுவதா?

இன்று இராணுவத்தில் கவாத்து செய்வதிலும் இந்தி வார்த்தை புகுத்தி இருக்கிறார்கள்.

நான் இரண்டு தினங்களுக்கு முன் திருச்சியில் ஒரு பொதுக்

(9ம் பக்கம் பார்க்க)

போராட்டக்குழு தலைவர் சம்பத் ஜரூர்!

ஆகஸ்டு 31ல் துவங்க இருக்கும் விடுதலைப் போரை மிகத் தீவிரமாக நடத்த-போராட்டக் குழுத் தலைவர் திரு. ஈ வி கே. சம்பத் அவர்கள் ஜரூர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தீவிரமாகப் பணி புரிந்து வருகிறார்!

தினமும் அறிவகத்திற்குச் சென்று போராட்ட அலுவல்களை கவனித்துக் கொண்டு வருகிறார்!

"போரட்ட முறை எப்படி இருக்க வேண்டும், போராட்ட காலத்தில் இயக்கத் தோழர்கள் எப்படி, எப்படி நடந்து கொள்ள வேண்டும்—மக்களுடைய ஆதரவை எப்படி திரட்ட வேண்டும்" என்பதைப்பற்றியெல்லாம், தினமும் இயக்கத் தோழர்களிடம் உரையாடி சிறப்பான முடிவைக் காண திவீரமாக யோசித்துக் கொண்டு வருகிறார்!

போராட்டக் குழுத் தலைவர் திரு. சம்பத் அவர்கள் மிக்கத் தெளிவாக, உற்சாகத்துடன், முன்னைவிட மிக்க சுறுசுறுப்போடும் வேலைகளை கவனித்துக் கொண்டு வருகிறார்!

திரு. சம்பத் எடுக்கும் ஜரூர் நடவடிக்கைகளையும். அவர் முகத்திலே காணப்படும் தெளிவையும் கவனிக்கும்போது—ஆகஸ்டு 31 உலகம் வியக்கும் நாளாக இருக்கும் என்பதில் துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிந்து கொள்ள முடிகிறது!

திராவிடத்தின் விடுதலைப் போருக்கு தஞ்சைத் தரணி பெரும் படைகளைத் திரட்டித் தரவேண்டும்!

என்றும், எதிலும் முன்னணியில் நிற்பது தஞ்சை தான்!

துப்பாக்கியும், தோட்டாக்களும் எங்கள் உயிரைக் குடிக்கலாம்— எங்கள் இலட்சியத்தைக் குடிக்க முடியாது!

தஞ்சை மாவட்டம், நாக பட்டினத்திற் கடுத்த திருமருகல் என்ற ஊரில் 27-6-60ம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழா, நடைபெற்றது.

இவ்விழாவிற்கு இவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. உலகநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் தி. மணிவண்ணன், தோழர் இள்ளிவளவன் ஆகியோர் பேசினார்கள்.

அடுத்து காட்டூர் திரு. ராமையா அவர்கள் பேசியதாவது.

"நமது திராவிடமுன்னேற்றக் கழகத்தைக் காங்கிரஸ்காரர்கள் மிக இழிந்த முறையில் தாக்கி வருகிறார்கள். அவர்கள் முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் பட்டு தாக்கி வருகிறார்கள். அவர்கள் தாக்கி வருவதைக் கண்டு நாம் கவலைப் பட வேண்டியதில்லை. நான் காங்கிரஸ்காரர்களைப் பற்றியும், 'காங்கிரசைப் பற்றியும் நன்கறிவேன்.

அவர்கள் உள்ளத்திலுள்ள நோக்கங்கள் என்ன? அந்தரங்கம் என்ன என்பதைப் பற்றியெல்லாம் நான் நன்கறிவேன்.

நான் காங்கிரசில் இருபதாண்டு இருந்திருக்கிறேன். நான் காங்கிரசில் தஞ்சை மாவட்டத்தில் மிக முக்கியமானவனாக இருந்து வந்துள்ளேன்,



அண்ணா அவர்களுக்கு ஒரு உறுதியளிக்க விரும்புகிறேன்.

"அறிஞர் அண்ணா அவர்களே! இந்தப் போராட்டத்தில் தஞ்சைத் தரணி தனது பங்கைத் தக்க முறையில் செலுத்தும்" என்பதை தஞ்சை மாவட்ட மக்கள் சார்பில் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்!

மற்றும் நமது அண்ணா அவர்கள் முன் இன்னொரு உறுதியை கூறிக் கொள்ளவும் ஆசைப்படுகிறேன்!

இந்தியை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் நான் பங்கு கொண்டு அதனால் வரும் எந்தவித இன்னல்களையும் ஏற்று இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கிறேன் என்பதோடு, அண்ணா அவர்கள் இடும் எந்த ஆணையையும் ஏற்று செயல்படத் தயார்! தயார்!! தயார்!!! என்று கூறி விடைபெறுகிறேன் என்று பேசி முடித்தார்.

அடுத்து அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார் அண்ணா அவர்களுக்கு சுமார் 50க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களும், துணை மன்றங்களும்; தனிப்பட்டவர்களும் மலர்மாலைகளும், கைத்தறியாடைகளும் அணிவித்தார்கள்!

பின் அறிஞர் அண்ணா அவர்கள் பெருத்த கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே அருமை நண்பர்களே! தோழர்

நாகையில் அறிஞர் அண்ணா முழக்கம்!

நான் தஞ்சை மாவட்ட காங்கிரசின் பொருளாளராகயிருந்து பணியாற்றி வந்துள்ளேன்.

காங்கிரஸ்காரர்கள் எப்படிப் பட்டவர்கள், எந்த நோக்கோடு பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் நானறிவேன்!

இந்த நாட்டின் மீதோ, இந்த நாட்டு மொழியின் மீதோ காங்கிரஸ்காரர்கட்குச் சிறிதும் அக்கறையோ, பற்றோ, பாசமோ கிடையாது,

இன்று நமது தாய் மொழியாகிய தமிழுக்குப்பெரிய ஆபத்து வந்திருக்கிறது. அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்.

இன்று நமது தமிழ் மொழிக்கு வந்துள்ள ஆபத்தைக் களைவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய போராட்டத்தை நடத்த முன் வந்திருக்கிறது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு நமது தாய் மொழியைக் காப்பாற்ற வேண்டிய நிலை நமக்கு வந்திருக்கிறது,

நம்முடைய நாட்டையும், நாட்டு மொழியையும் அடிமைப் படுத்துவதற்கு இந்தியைப் புகுத்த டில்லி அரசினர் முன் வந்து விட்டார்கள். அவர்களின் அந்த எண்ணத்தைப் போக்க நாம் போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது.

இதை மனதில் கொண்டு குமாரபாளையத்தில் கூடிய நமது கழகத்தின் பொதுக் குழு இந்தியை எதிர்த்து போராட்டம் நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த முடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன்.

இந்தக் கூடடத்தின் வாயிலாக நமது தலைவர் அறிஞர் களே!

நான் திருமருகல் என்ற இந்த நகருக்கு வந்ததில் நீங்கள் அடையும் மகிழ்ச்சியையும், பெருமையையும் விட, அதிக மகிழ்ச்சியையும் பெருமையும் அடைகிறேன்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தஞ்சைத் தரணி எப்பொழுதுமே தனது ஆதரவையும், அன்பையும் செலுத்தி வந்திருக்கிறது. இந்தத் தஞ்சைப் பகுதியிலுள்ளவர்

(8ம் பக்கம் பார்க்க)

13

காதல்! காதல்!
சாதல்! சாதல்!

மூன்று மாத காலம் பயிற்சிக்காக வெளியூரில் தங்கி இருந்து விட்டு வீடு திரும்பிய ராஜனுக்கு கொஞ்சம் கூட மன நிம்மதியில்லை!

மன நிம்மதியைப் பெறுவதற்காக ஊர்க்கோடியிலுள்ள ஒரு மாந்தோப்பில் போய் உட்கார்ந்து கொண்டான்! பக்கத்திலே ஒரு தென்னந்தோப்பும், அதையொட்டி ஒரு நீரோடையும் இருந்தன! தென்ன மரங்கள் வீசிய தென்றல், நீரோடையைத் தொட்டு, மாமரச் சோலை தரும் மந்தகாசத்தோடு விளையாடி ராஜனுடைய உடலை அப்படியே கட்டித்தழுவிக் கொண்டிருந்தன!

இந்தத் தென்றலுக்கு இருக்கின்ற அன்பு கூட சாந்தாவுக்கு இல்லையே! என்னைக் கண்டால் இந்த மாமரச் சோலை எத்தனை மகிழ்ச்சியடைகிறது, எத்தனை, எத்தனை மந்தகாசத்தை ஊட்டுகிறது! புல், பூண்டு, செடி, கொடி, மரங்களுக்கு இருக்கின்ற அன்பு கூட அவளுக்கில்லையே!

மனநிம்மதிக்காக வந்தவன் மேலும் மனமுடைந்து போனான்!

மாடப் புறா ஒன்று தன் ஜோடிப் புறாவுடன் மரப் பொந்திலிருந்து தலையை நீட்டி அவனை வெட்டி வெட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது! அது ராஜனை கேலிசெய்வதுபோல் இருந்தது! இந்த காட்சியைக் கண்டு ராஜன் தலை கவிழ்ந்து கொண்டான்! சிறிது நேரம் எதைப் பற்றியோ யோசித்து விட்டு-தன் மணிபர்சுக்குள் வைத்திருந்த புகைப்படம் ஒன்றை எடுத்து அதையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்! யாருடைய புகைப்படம் அது? அவனுடைய அன்புக் காதலி சாந்தாவின் புகைப்படம் தான் அது!

அவளுடைய முகம் சலனமற்றிருந்தது! அதில் களங்கம் சிறிது கூட தென்படவில்லை! கனி சொட்டும் அந்த முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்!

"சாந்தா! நீயா களங்கமுள்ளவள்! உன்னைப் பற்றி ஊர் ஏதேதோ சொல்லுகிறதே அதெல்லாம் உண்மை தானா? நீ ஏன் அப்படியெல்லாம் நடந்து கொள்ளுகிறாய்? உனக்கு என்ன இல்லை! சீமான் வீட்டில் பிறந்தாய், செல்வத்தில் புரண்டாய்! கண்ணுக்குப் பிடித்தவனையும் காதலனைத் தேர்ந்தெடுத்தாய். உனக்குள்ளெல்லாம் இருந்தும் இந்த ஈன புத்தி வரக் காரணமென்ன?"

சேச்சே! ஈனப் புத்தி என்று எப்படி சொல்லமுடியும்! ஒருவேளை ஊர் அவளைப்பற்றி பொறாமையால் கதை கட்டி விட்டிருந்தால்! எதற்கும் நேரில் சந்தித்து கேட்டு விடுவோமே! அது தான் நல்லது! என்று யோசித்தபடி அந்த மாந்தோப்பை விட்டுப் புறப்பட்டான்!

"பாரத் ஹிந்த் சேவா சங்கம்" என்று ஒரு பெரிய போர்டு தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய மாளிகைக்குள் நுழைந்தான்! சிறிது நேரம் அப்படியே பிரமித்தே நின்று விட்டான்!

இதுவா பாரத் இந்த் சேவா சங்கம்? சலவைக் கற்கள் பதித்த தரை! மனிதர்கள் நடந்தால் தரையில் அழுக்கு படாமல் இருக்க போடப்பட்டிருந்த விலை உயர்ந்த விரிப்பு! முகம் தெரியும் பளிங்குச் சுவர்கள்! அங்கணத்திற்கு அங்கணம் சுழன்று கொண்டிருக்கும் மின்சார விசிறிகள்! ஆங்காங்கே வரிசை வரிசையாகப் போடப்பட்டிருக்கும் சோபாக்கள்! எல்லாவற்றையும் பார்த்து ஒரு கணம் திகைத்தே விட்டான்!

இவர்கள் எந்த சமூகத்திற்காக சேவை செய்கிறார்களோ அந்த சமூகம் குப்பை மேட்டில் வாழ்கிறது, பாம்பும், தேளும் நெளிகின்ற இடத்தில் வசிக்கிறது! இவர்களோ, கோமானைப் போல் வாழ்கிறார்கள்! லண்டன் பக்கிங்காம அரண்மனையை பல்லிளித்துப் பழிக்கும் இந்த சொர்க்கலோகம் ஏழை என்ற போர்வையில், சமூக சேவை என்ற உருவில் அமைந்திருக்கிறது!

ராஜன் உள்வாற்படியைக் கடந்து உள்ளே சென்றான்! அங்கே ஒரு கண்ணாடி அறையைக் கண்டு மேலும் திகைத்துப் போனான்! அந்த கண்ணாடி அறை சுவற்றில்...

டாக்டர் சாந்தாதேவி
சமூக சேவகி

என்று ஒரு சின்ன போர்டு தொங்கிக் கொண்டிருந்தது! ஓகோ! இந்த அறையில் தான் சமூக சேவகி வீற்றிருக்கிறாள் போலும் என்று கொஞ்சம் தலைகனத்தோடு மனதிலே எண்ணிக் கொண்டான் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு அந்த அறையின் கதவைத் திறந்தான்! அதற்குள் ஒரு நீல நிற முண்டாஸ் கட்டிய பியூன் ஓடி வந்து 'உங்களுக்கு யார் வேண்டும்" என்று கேட்டான்!

'சாந்தாவைப் பார்க்கவேண்டும் என்று ராஜன் பதில் சொன்னான்!

'அதோ விசிட்டர்ஸ் சோபாக்கள் இருக்கின்றன, அங்கே போய் உட்காருங்கள்! நீங்கள் யார்? எதற்காகப் பார்க்க வேண்டும்? உங்கள் விசிட்டிங் கார்டையும் கொடுங்கள்" என்று அதிகார தோரணையில் அந்தப் பியூன் கூறினான்!

ராஜன் அந்த பியூனிடம் தன் விசிட்டிங் கார்டை கொடுத்தான்! ஒரு சமூக சேவகியைப் பார்ப்பதற்கு இத்தனை ஆடம்பரமா? ஏழைகள், ஏழைகள் என்று சொல்லி விட்டு இப்படி சல்லாபம் அனுபவிக்கிறார்களே என்று பெருத்த மனக் கவலையில் ஆழ்ந்திருந்தான்!

சுவற்றில் மாட்டி இருந்த கடிகாரம் கொஞ்சம் கூட ஓய்வில்லாமல், அலுப்பு சலிப்புக் கொள்ளாமல் தன் கடமையை செய்து கொண்டிருந்தது! ஒரு மணி நேரத்திற்கு மேலாகி ராஜனுக்கு சாந்தா விட மிருந்து அழைப்பு வரவே இல்லை!

சமூகசேவகி சாந்தாதேவியின் அழைப்பு அவ்வளவு சுலபத்திலா கிடைத்து விடும்? அந்தக் காலம் மலையேறி போய் எத்தனையோ மாதங்களாகி விட்டன!

உள்ளே நான்கைந்து பேர்களோடு அரட்டை யடித்துக் கொண்டிருந்தாள்!

ராஜனுக்கு எதுவும் காதில் விழவில்லை! அங்கே சிரிக்கின்ற சிரிப்போசைதான் ராஜனுடைய காதில் இடியோசையாக ஒலித்துக் கொண்டிருந்தது! சாந்தாதேவி ஒரே கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தாள்! இது ராஜனுக்கு பெருத்த சந்தேகத்தையும், கவலையையும் அளித்தன!

அந்த நேரத்தில் அந்த பியூன் வெளியே வந்தான்! "என்னப்பா கார்டை அம்மாவிடம் கொடுத்தாயா" என்று ராஜன் கேட்டான்!

'ஓ, கொடுத்து விட்டேன்! கொஞ்ச நேரம் உட்காரச் சொன்னார்கள்!" என்றான் பியூன்!

"காலை 11 மணிக்கு வந்தேன் —சரியாக மணி இரண்டு அடித்து விட்டது! இதுவா கொஞ்ச நேரம்! கண நேரம் காண விட்டாலும் கண்ணீர் வடித்த நிலைமாறி விட்டது! இப்போ அந்த அம்மாவைப் பார்ப்பதற்கு மணிக் கணக்கில் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது" என்று தனக்குத் தானே அவன் நினைத்துக் கொள்ளும் போது அவனுடைய கண்கள் கலங்கத் தான் செய்தன!

வாட்ட சாட்டம் உள்ள ஒரு நான்கைந்து பேர்—"ஷிரியோ" என்று கையைக்காட்டி சொல்லி விட்டு வெளியேறினார்கள்! அவர்கள் வெளியேறியவுடன் ராஜனுக்கு அழைப்பு வந்தது! ராஜன் உள்ளே சென்றான்!

'டேக் யுவர் சீட்!" சாந்தா, சாதனைப் போல் ஈனக் குரலில் கூறினாள்!

ராஜனும் அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டான்! இருவரும் பேசாமலேயே உட்கார்ந்து கொண்டிருந்தனர்! ராஜனுடைய கண்கள் அந்த அறையைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தது!

சாந்தா நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அதைச் சுழற்றிக் கொண்டே இருந்தாள்!

அவளுடைய அறை இந்திர ராஜ பவனம் போல் இருந்தது! கீழே ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது! வெல்வெட் சோபாக்கள் வரிசை வரிசையாகப் போடப்பட்டிருந்தன!

சாந்தாவுக்கு மேலே பளிங்குச் சுவற்றில், மகாத்மா காந்தியின் திரு உருவப் படமும், எதிர்புறத்திலே நேருவின் உருவப் படமும், ஒரு ஆள் உயரத்தில் மாட்டப்பட்டிருந்தன! பக்கத்திலே யார் யார் படங்களோ மாட்டப்பட்டிருந்தன! அவனுக்கு யாருடைய படம் என்றே புரியவில்லை! எல்லாம் வடநாட்டுத் தலைவர்களின் படமாகவே இருந்தன!

"என்னை, உங்களுக்குத் தெரிகிறதா?" ராஜனே முதலில் பேச்சை ஆரம்பித்தான்!

"ஓ, தெரிகிறதே! எங்க வீட்டு வேலையாள் கந்தனுடைய சன் தானே!" அலட்சியமாகக் கூறினாள்!

"ஆமாம்! உங்க வீட்டுக்கு எங்க அப்பா வேலையாள் மட்டுமல்ல, சம்பந்தியும் கூட!" ராஜன் கண்கள் சிவக்க பதில் சொன்னான்!

“ஓ, அப்படியா! சரி தான்” சாந்தா செருக்காகப் பதில் சொன்னாள்!

“ஓ, அந்த அளவிற்கு வந்து விட்டாயா?’ ராஜன் உள்ளம் துடிக்கக் கேட்டான்!

“எந்த அளவுக்கு ராஜன்?” சாந்தா ஒரு அலட்சியப் பார்வையை வீசினாள்!

“நீ, என் மனைவி ஞாபகத்தில் வைத்துக் கொள்!” ராஜன் எரிமலையானான்!

‘தொட்டு தாலி கட்டினையா? அப்படி ஒன்றும் என் கழுத்தில் இல்லையே!”

“அடி பாதகி. வஞ்சகி, மோசக்காரி!” ராஜன் வார்த்தை களைக் கொட்டிக் கொண்டே போனான்!

“மிஸ்டர் ராஜன்! நீங்க ஏதை ஏதையோ சொல்றீங்களே! யாருக்கு என்ன துரோகம் செய்தேன்!” சாந்தா பல் கடுக்கோடு மெதுவாகக் கேட்டாள்!

“பாதகி, யாருக்கென்று கேட்கிறாய் சென்னை கடற்கரையைக் கேள், அங்குள்ள பூங்காக்களைக் கேள், அவைகள் பதில் சொல்லும்!

“உங்களோடு பேசினேன், உங்களோடு இன்பமாக இருந்தேன்! உங்களை அத்தான் என்றும் அழைத்தேன்!” அதைத் தானே சொல்லுகிறீர்கள்!

“ச்சீ! உனக்கு கொஞ்சம்கூட வெட்கமில்லையா?’

“எதற்கு ராஜன் கோபிக்கிறீர்கள்! காலையிலே இட்லி. தோசை சாப்பிடலாம் அதையே மத்தியான உணவாகச் சாப்பிட முடியாது! மாலையில் பாதம் அல்வா சாப்பிடலாம் — அதை காலையில் சாப்பிட முடியாது! மனிதனுடைய விருப்பத்திற்கும் வசதிக்கும் தான் வாழ்க்கை இருக்கிறதே தவிர ஒருவருக்கே அடிமை சாசனம் எழுதிக் கொடுத்து விட்டு அடிமையாக இருப்பதற்கல்ல! மனித இனத்தின் எண்ணம் எப்போதும் ஒரு நிலையில் இருக்காது. இருக்கவும் கூடாது, வசதிக்கும், வாய்ப்புக்கும், சூழ் நிலைக்கும் ஏற்றபடி எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்! அல்லது விரிவு படுத்திக் கொள்ள வேண்டும்! இதை உணர்ந்து கொண்டால் இவ்வளவு கோபம் உங்களுக்கு வராது!” சாந்தா நாகரீகத்தத்துவம் பேச ஆரம்பித்தாள்!

‘விபச்சாரி! நீயா சமூக சேவகி! உன்னைப் போன்ற குடி கெடுக்கும் தாசிகளால் தான் சமூக சேவை என்ற சொல்லுக்கே களங்கம் ஏற்பட்டு விட்டது! உன்னை என்ன செய்கிறேன் பார் “ராஜன் தன் காலில் போட்டிருந்த செருப்பை கழட்டினான்!

அதற்குள் அங்கு ஜனம் கூடி விட்டது! ராஜனை வெளியிலே பிடித்துத் தள்ளினார்கள்!

“காதல், காதல், காதல் போயின்—சாதல், சாதல்” என்று எவனோ ஒரு பிச்சைக்காரன் தெருவில் பாடிக் கொண்டே சென்றான்! ராஜன் அந்த பாட்டிற்கு ஏற்றவாறு கையால் தாளம் போட்டுக் கொண்டே வீதியிலே நடக்க ஆரம்பித்தான்!

(வளரும்)

(அண்ணா பேச்சு)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இரா எதை நினைத்துக் கொண்டு எனக்கு அரசியலைக் கற்றுக் கொடுக்க நினைக்கிறார்.

காமராசரே நேரா எனக்கு அரசியல் கற்றுக் கொடுக்க வந்து விட்டார் உம்மிடமா நான் அரசியல் பாடம் கேட்பது இந்த நிலையை உலகம் தாங்காது காமராசரே உலகம் தாங்காது,

கடைசியாக நான் இந்த ஆட்சியாளர்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வட நாட்டுக்காரனுக்கும் எங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. அவர்களின் தொடர்பில் இருக்க நாங்கள் விரும்பவில்லை. அவன் பிடியிலிருந்து விடுபட நாங்கள் முற்பட்டு விட்டோம். எங்கள் நாடு எங்களுக்காக வேண்டும் அதைப் பெறும் வரை நாங்கள் போராடியே தீருவோம். இதற்காக இந்த ஆட்சி எந்த செக்ஷன் போட்டு என்னை அடக்கப் பார்த்தாலும் அதற்குப் பயப்பட மாட்டேன்.

மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன் வடநாட்டானுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான ஒட்டோ, உறவோ, சம்மந்தமோ கிடையாது. ஆகவே நம் நாட்டை மீட்கும் விடுதலைப் போராட்டத்தில் நீங்கள் ஈடுபடத் தயாராக இருங்கள். இது நமக்கு நல்ல சந்தர்ப்பம் இதை நழுவவிடக் கூடாது தஞ்சைத் தரணி தன் பங்கைச் செலுத்த முன் வர வேண்டும்.

தஞ்சைத் தரணி தான் எப்பொழுதும் தமிழ் நாட்டில் அரசியலை உருவாக்கமுன்னணியில்நிற்கும். அந்தத் தரணியிலுள்ளவர்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியும் ஆற்றலும், திறமையும் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

இங்குள்ளவர்கள் எல்லாம் முன் யோசனைப்படி நடந்து அரசியலை நல்ல முறையில் நடத்திச் செல்வார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தஞ்சைத் தரணி எப்பொழுதுமே தனது பங்கைச் செலுத்தி ஆதரவு தந்து வந்திருக்கிறது.

நெருக்கடியான காலங்களிலெல்லாம் இந்த வட்டம் கை கொடுத்து ஆதரித்திருக்கிறது. அதை இப்பொழுது இந்தப் பகுதியிலுள்ளோர் மறந்து விட மாட்டார்கள்.

வருகின்ற நமது விடுதலைப் போரில் — இந்தியை ஒழித்து நம் மொழியைக் காக்கின்ற இந்தப் போரில் தஞ்சைத் தரணி தனது பங்கைச் செலுத்தியே தீரும். அது பின் வாங்காது.

இங்கு கூடியிருக்கின்ற நீங்களெல்லாம் இன்றே தயாராகுங்கள்.

இது வெறும் இந்திப் போராட்டம் மாத்திரமல்ல. நமது நாட்டைக் காக்கும் போராட்டம் வாரீர் வாரீர் போராட்டத்தில் ஈடுபட்டு உங்கள் வீரத்தைக் காட்ட வாரீர் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

எஸ். கல்யாணம்

(நாகை)

★

தி. மு. க. போராட்டத்தில் ஆச்சாரியாரும் கைது செய்யப்படலாம்!

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்த இருக்கின்ற போராட்டத்தில் இந்தியை விரும்பாத எல்லாத் நண்பர்களும், எல்லா தலைவர்களும் கலந்து கொள்ளுவார்கள் என்று கூறப்படுகிறது!

முன்னாள் கவர்னர் ஜெனரலும் சென்னை முன்னாள் முதலமைச்சருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் நமது போராட்டத்தில் ஈடுபட்டு, அடக்குமுறைகளுக்கு ஆளாகி சிறை செல்லக் கூடும் என்றும் நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது!

இந்த வதந்தியை உண்மையாக்குவது போல் “கல்கி” ஏடும் துணை தலையங்கம் தீட்டி இருக்கிறது! “எல்லா கட்சிக்காரர்களும், தி. மு. க. வோடு சேர்ந்து போராட வேண்டும்” என்று “கல்கி” ஏடு எல்லோருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது!

“கல்கி” விடும் வேண்டுகோள் ஆச்சாரியார் விடும் வேண்டுகோள்—கல்கி எழுதும் எழுத்துக்கள் ஆச்சாரியார் எழுதும் எழுத்துக்கள் என்பதை உலகம் அறியும்!

எனவே, கல்கியின் மூலம் இந்தி எதிர்ப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து விட்டு. ஆச்சாரியார் மட்டும் வீட்டில் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்க மாட்டார்! ஆச்சாரியார் அடக்குமுறைகளையும் அனுபவித்திருக்கிறார்—அடக்கு முறைகளையும் ஏவி இருக்கிறார்! அவருக்கு எல்லாம் தெரியும்! எனவே அச்சப்பட்டு இந்தியை எதிர்க்காமல் ஓடி விட மாட்டார், ஒளிந்து கொள்ள மாட்டார்!

இந்தியை எதிர்ப்பதாகச் சொல்லித் திரியும் பேர் வழிகளில் யார் வந்தாலும். வராவிட்டாலும் ஆச்சாரியார் வருவது உறுதி! ஆச்சாரியார் நம்மோடு சேர்ந்து அடிபடுவதும் உதை படுவதும் உறுதி! சிறைக்குச் சென்று வாடப் போவதும் உறுதி!

ஆச்சாரியார் நமக்கு பெரும் வைரியாக இருந்தாலும். ஆச்சாரியார் இந்தியை எதிர்க்கும் காரணத்தால் அவரை பெருந்தன்மையோடு வரவேற்கிறோம்!

நாவடக்கமின்றி பேசி வருகிறார் மாநிலத்து முதலமைச்சர் காமராஜர் !

எப்படி வந்தது அவருக்கு இந்த தைரியம் !

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எப்பொழுதுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணைக்கு உட்பட்டு தங்களது சேவையை நல்ல முறையில் செய்து வந்திருக்கிறார்கள்!

அப்படிப்பட்ட இந்தத் தஞ்சைத் தரணியில் நமது மாநில முதலமைச்சர் காமராஜர் சூறாவளி சுற்றுப்பயணம்—மின்னல் வேகத்தில் சுற்று பயணம் செய்தார்!

அப்படி அவர் சுற்றுகின்ற நேரத்தில் நமது கழகத்தையும், நம்மையும் மிக, மிக இழிவாகவும், கடுமையாகவும் தாக்கி வந்தார் என்று நமது நண்பர்கள் மிகவும் வருத்தத்தோடு கூறினார்கள்.

ஆனால் நான் மட்டும் அவர் அப்படிப் பேசியதைக் கேட்டு, மிக, மிக மகிழ்ச்சியடைந்ததோடு, பெருமையும் பட்டேன்.

இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பவரும், மாதம் இரண்டாயிரம் சம்பளம் பெற்று வருபவருமான திரு. காமராசருக்கு நம்முடைய நினைவு வந்ததையறிந்து மிக மகிழ்ச்சி கொண்டேன்.

இன்று அவருக்கு எவ்வளவோ தொல்லைகள் இருந்து வருகிறது. அவர் கவனிக்க வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கிறது. அவர் எதையும் கவனிப்பதற்கான நினைவோ, நேரமோ இருக்காது. நம்மைப் பற்றியோ நமது கழகத்தைப் பற்றியோ சிறிதும் எண்ண மாட்டார். அலட்சியப்படுத்துவார் என்று எண்ணி வந்தேன். ஆனால் நான் நினைத்ததைத் தவறெனச் செய்து விட்டார். நான் நினைத்திருந்தது உண்மையல்ல வென்பதை நிரூபித்து விட்டார்.

காமராசருக்கு இருந்து வரும் மகத்தான பல பணிகளில் என்னையும் மறக்கவில்லை. நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தையும் மறக்கவில்லை. இதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

அவர் நம்மை மறக்கத் தான் நினைக்கிறார்—அவர் நம்மை அலட்சியம் செய்யத் தான் பார்க்கிறார் ஆனால் நாமடைந்துள்ள வளர்ச்சி, நமது கழகத்தின் மீது மக்கள் வைத்துள்ள பற்று அவரை மறக்க விடவில்லை.

இன்று நமது கழகம் இல்லாத இடமில்லை. நமது கொடி பறக்காத இடமில்லை.

"எங்கும் நிறைந்த நாதமாக" எல்லா இடங்களிலும் நமது கழகம் இருந்து வருகிறது. அவர் போகின்ற இடங்களிலெல்லாம் நம்மைத் தான் காண்கிறார். அதனால் அவருக்குக் கோபம் வருகிறது, அந்தக் கோபத்தால் நம்மைத் தாக்குகிறார்.

காமராசர் பேசுகின்ற கூட்டங்களிலெல்லாம் இப்போது நம்மைத் தாக்குவதை மறப்பதில்லை.

"பாட்டுக் கச்சேரிகளில் மங்களம்" பாடுவதை எப்படிக் கையாண்டு வருகிறார்களோ, அதே போன்றுதான் நம்மைத் தாக்குவதைக் கையாண்டு வருகிறார். அந்த நிலை அவருக்கு கட்டாயமாகிவிட்டது. அவர் இப்படித் தாக்கி வருவது கண்டு நான் வருந்தவில்லை. அதற்கு மாறாக மகிழ்ச்சி தான் கொள்கிறேன்.

நம்முடைய கழகத்தை மாற்றார் தாக்கித் தாக்கி பேசியதால் தான், இழித்து இழித்து திட்டியதால் தான் நாம் இன்று இவ்வளவு பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்.

காலஞ்சென்ற ஜனாப் ஜின்னா பாக்கிஸ்தான் வேண்டுமென்று கேட்ட போது அவரை மிகவும் கேவலமாகவும், இழிவாகவும் தாக்கிப் பேசினார்கள். அதைக் கண்டு ஜனாப் ஜின்னா வருந்தவில்லை—கோபப்படவில்லை. அதை அலட்சியம் செய்து வந்தார்,

மாற்றார் தாக்கியதால் ஜின்னாவின் பாக்கிஸ்தான் குறைந்து விடவில்லை-மறைந்து விடவில்லை. அதற்கு மாறாக முஸ்லீம் மக்கள் இருக்கின்ற இடங்களிலெல்லாம் பரவியது, முஸ்லீம்களெல்லாம் அறிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

ஜின்னாவைப் பற்றித் தெரியாத முஸ்லீமும், பார்க்காத முஸ்லீமும் ஜின்னாவைத் தெரிந்து கொள்ள முடிந்தது! அவர் பக்கம் நிற்க வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது! அவருக்கு ஆதரவுதர வேண்டுமென்ற ஆசை பிறந்தது!

திட்டச் சேரியிலுள்ள அப்துல்லாவுக்கும், திருமருகலிலுள்ள காதருக்கும் ஜின்னாவைத் தெரியாது ஆனால் மாற்றார் அவரைத் தாக்க ஆரம்பித்தவுடன், "ஜின்னா என்று ஒருவர் இருக்கிறாம், அவர் முஸ்லீம் இனத்தின் ஒப்பற்ற தலைவராம்! அவர் முஸ்லீம் சமூகத்தைக் காப்பாற்றப் பாடுபடுகிறாம்!

அவரை மற்றவர்கள் இழிவாகப் பேசுகிறார்கள். நாமெல்லாம் அவரைப் பின் பற்றி அவருக்கு ஆதரவு தர வேண்டுமென்று நினைத்து ஆதரவு கொடுக்கிறார்கள் அது போன்று தன் இன்று நமக்கும் காமராசரும், காங்கிரசாரும் என்னையும் நமது கழகத்தையும் இழிவான முறையில் மக்கள் முன் பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பிற்போக்கான கட்சி, அதன் தலைவர் அண்ணாதுரை குள்ளமானவன், அவன் போக்கிரி, அவன் கட்சியை நம்பாதீர்கள் என்று சொன்னார்கள்—சொல்லி வருகிறார்கள். இதை மக்கள் கேட்கிறார்கள்! நம் கழகத்தின் சார்பில் நடைபெறும் கூட்டத்திற்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். என்னைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்! என் பேச்சைக் கேட்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் கூட்டங்களுக்கு ஏராளமாக வந்து பார்க்கிறார்கள் நான் வந்தால் பெருவாரியாகக் கூடி பார்க்கிறார்கள். என் பேச்சைக் கேட்கிறார்கள்.

முதன் மந்திரி காமராசர் என்னைப் போக்கிரி என்று கூறியதை நினைத்துப் பார்க்கிறார்கள் அவரை மூன்று முறை முறைத்துப் பார்த்து என்னையும் பார்த்த பின் யார் போக்கிரி யார் கூறுவது சரி எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நல்லது என்று பட்டதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் எனது திருமண காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவு படுத்த விரும்புகிறேன்!

எனக்கு திருமணம் நிச்சயமாயிற்று பெண் பார்த்து முடிவு செய்தார்கள்! எனக்கு பார்த்திருக்கும் பெண் எப்படியிருக்குமோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன் என்னை கேலியும், கிண்டலும் செய்ய எண்ணிய எனது குறும்புக்கார நண்பர்கள் எனக்கு வரப் போகும் மனைவி கருப்பு நிறமுடையவர். அழகற்றவர் என்று கூறினார்கள்! இதை நான் நம்பினேன், எப்படியும் மணப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. பார்க்க என் மனம் துடி, துடித்தது! மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ கேலி செய்வார்களோ என்று நினைக்கவில்லை எனக்கு வர விருந்த பெண்ணைப்

(11-ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்டு 31 மந்திரிகள் தீவிரம் !

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சகதியைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகப் போராட்டங்களைப் பற்றியும் கேலியும், கிண்டலும் செய்து வந்த அமைச்சர்கள் இப்போது தீவிர மான யோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது!

நாம் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்த போது அமைச்சர்கள் யாரும் சட்டை செய்யவே இல்லையாம்! இது வெறும் கண்ணாம் மூச்சு விளையாட்டாக இருக்கும் என்று தான் நம்பிக் கிடந்தார்களாம்! அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சில் சூடு ஏற ஏற, அறிஞர் அண்ணா அவர்கள் மக்களுக்குப் பிறப்பிக்கும் கட்டளையைக் காணக் காண மந்திரிகளுக்கு குலை நடுக்கம் ஏற்பட்டு விட்டதாம்!

முதலமைச்சர் காமராஜர்—"போராட்ட வீரர்கள் மீது ஏதும் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் போராட்டம் பிசுபிசுத்து போய் விடும்" என்று நினைப்பதாகவும்—நிதி அமைச்சர் சுப்பிரமணியமும், தொழில் அமைச்சர் வெங்கட்ராமனும் "தீவிரமாக நடவடிக்கை எடுத்து போராட்டத்தை நசுக்க வேண்டும்" என்று நினைப்பதாகவும் பலமான வதந்தி சென்னை நகரம் முழுவதும் பரவி இருக்கிறது!

அமைச்சர்களுக்கே இன்னும் ஒரு தெளிவு ஏற்படவில்லையாம்! "என்ன செய்வது, எப்படி அடக்குவது" என்பதைப் பற்றியும் அமைச்சர்களுக்குள்ளேயே ஒரு முடிவு ஏற்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது!

எது எப்படி இருந்த போதிலும் தீவிரமான நடவடிக்கையின் மூலம் போராட்டத்தை நசுக்க எல்லாவிதமான முறைகளையும் கையாள்வார்கள் என்பதில் துளியும் சந்தேகம் வேண்டாம்!

சொத்தை வாதம் காட்டி நம்மை அடக்க

சுப்பிரமணியம் பார்க்கிறார் !

இந்த வாதத்தால் தமிழர்கள் உணர்ச்சி என்றும் மங்காது !

(சம்பத் பேச்சு)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு சீட்டு வந்தது. அந்தச் சீட்டு எழுதியவர் போலீஸ் அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரி என்று தெரிய வந்தது.

போலீஸ் அணி வகுப்பின் போது நடத்தும் ''கவாத்து''களிலும் இந்தி மொழியைத் தான் உபயோகப் படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக'' அந்தக் கடிதத்தில் அவர் எழுதி இருந்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது, தமிழ் நாட்டிலுள்ள போலீஸ் இலாக்காகளிலும் இந்தியை எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகி விட்டது. இன்று நாட்டு மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

இங்குள்ள, ஏழெட்டுப் பேர்கள் மட்டும் மக்களுடைய உள்ளக் குமுறலை அறிந்து கொள்ளாது ஆணவமாக இருந்து வருகிறார்கள்.

அவர்களுக்கு இருந்து வருகிற அதிகார கொழுப்பாலும், ஆணவத்தாலும் பதவி செருக்காலும் இன்று நாட்டில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளை அறியாதவர்கள் போல நடந்து கொள்கிறார்கள்.

கண்களில் கொழுப்பேறியவனுக்கு நாட்டில் நடப்பதைத் தெரிந்து கொள்ள முடியாது கண்களை மூடிக் கொள்ளும் அதற்குத் தான் மஞ்சள் கொழுப்பு என்று சொல்வது. அந்த மாதிரி மஞ்சள் கொழுப்பு இன்று இங்குள்ள அமைச்சர்களுக்கும் பிடித்திருக்கிறது. அதனால் தான் மக்களின் அபிப்ராயத்தையே ஏற்றுக் கொள்ள மறுகிறார்கள்.

இந்த நிலை என்றும் நிலைத்திருக்க முடியாது மக்கள் சக்தி திரண்டெழுந்து விட்டது. இந்த சக்தியைக் கொண்டு இந்த அமைச்சர்களின் போக்கை திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றத் தான் போகிறது.

மக்கள் தங்கள் உரிமையைப் பெற—தங்கள் நாட்டை விடுவிக்க சாகத் துணிந்து விட்டார்கள் இந்த முடிவை இரண்டு லட்சம் மக்கள் முடிவு எடுத்து விட்டார்கள்.

இந்த எண்ணத்தை எந்த சக்தியாலும், எந்த அடக்கு முறையாலும, எந்தவித அதிகார பலத்தாலும் அடக்க முடியாது.

சர்க்காரின் கண் மூடித்தனத்தை, அவர்கள் மமதையை நாங்கள் மாற்றத் தான் போகிறோம், எங்களின் சக்தியையும், எங்கள் வீரத்தையும் இந்த ஆட்சியினர் தடுத்துவிட முடியாது. நாட்டிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது.

நான் நான்கைந்து தினங்களுக்கு முன் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக் குறிச்சிக் கடுத்த வடக்கனந்தல் கிராமத்திற்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன்.

கூட்டம் நடைபெறுவதற்கு முன் அங்கு ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது, அந்த ஊர்வலத்தில் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் கலந்து கொண்டார்கள்.

முன்பெல்லாம் ஊர்வலத்தில் கலந்து கொள்கிறவர்கள் முப்பது, நாற்பது பேர்கள் தான் கொடிகளைப் பிடித்துக் கொண்டு போவார்கள். ஆனால் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கொடிகளைப் பிடித்து வந்தது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அதைப் பார்த்ததும் எனக்கு இலக்கியகாலத்தை நினைவு படுத்தியது.

அந்தக் காலத்தில் போருக்குச் செல்கின்ற வீரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கைகளில் வேல்களைத் தாங்கி கொண்டு, போர் முழக்கமிட்டு போர் படைக்குச் செல்வது போன்றிருந்தது.

இந்த ஊர்வலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் கண்டதும் என் உடல் சில்லரித்து விட்டது நான் அதை பார்த்ததும் பெரும் ஆனந்தம் அடைந்தேன்.

வழக்கமாக நமது ஊர்வலங்கள் நடைபெறும் போது இடையே நிறுத்தி ஊர்வலத்தில் வரும் தலைவர்களுக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணுபவிப்பார்கள். ஆனால் இந்த ஊர்வலத்தில், ஒரு வீர உள்ளம் படைத்தவர் என்னைப் பாாத்து ''இந்தப் போராட்டத்தில் வெற்றி வாகைமாலை சூடி வாருங்கள்'' என்று கூறியதோடு நில்லாது தனது கரத்தைக் கத்தியால் கீறி இரத்தத்தை எடுத்துக் கொடுத்து, ''என் உயிரையும் கொடுத்து நாட்டின் மானத்தைக் காக்கத் தயார் என்று உறுதி மொழி கொடுத்தார். இதை நான் கண்டித்தேன். இந்த மாதிரி ஆவேசம் இப்போதே கூடாது. சந்தர்ப்பம் வரும் போது அதைச் செயலில் காட்டுவோம் என்று கூறினேன்,

இங்க மாதிரி நாட்டில் மக்களுடைய விடுதலை உணர்ச்சி பொங்கி எழுந்து வருகிறது. இதை மறைக்க இங்குள்ள மந்திரிகள் பல கயமைத்தனமான காரியங்கள் செய்து வருகிறார்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு சிலர் காட்டும் வேடிக்கை விளையாட்டு ஒரு வித்தை என்று எண்ணிக் கொண்டு கேலி செய்து வருகிறார்கள்.

நான் ஆட்சியாளருக்கு—அமைச்சர்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

இன்றைய தினம் தென்னகத்திலுள்ள மக்களின் உள்ளமெல்லாம் எரிமலையாகி இருக்கிறது. அதன் முன் அமைச்சர்கள் நிற்க ஆரம்பித்தால் தவிடு பொடியாகி விடுவார்கள்,

மக்களின் கொதிப்பை உணராமல் நடந்து கொண்டு மன்னாதி, மன்னர்களெல்லாம் மண் கவ்வியிருக்கிறார்கள். இதை உலக வரலாற்றுகளிலிருந்து அமைச்சர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உலக வரலாற்றைப் புரட்டிப் பார்க்க முடியா விட்டாலும் சமீபத்தில் நடைபெற்ற மெண்டாரிசின் நிலைமையையும், பரூக் மன்னனின் நிலைமையை யாவது தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

நமது கூட்டங்கள் நடைபெறுவதற்கு பல இடையூறுகளும் வரம்புகளும் போட்டு தடை செய்ய ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள். இது பற்றி நமது தோழர்கள் உங்கள் மத்தியில் கூறினார்கள்.

ஆட்சியாளர்களின் உள்ளம் என்ன என்பதையும், அவர்கள் தங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் என்னால் உணர முடிகிறது, மக்களுக்குள்ள ஜனநாயக உரிமைகளைப் பறிக்கவும், அவர்களின் எண்ணத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடுபடவுமான காரியங்களில் இங்குள்ள போலீஸ் அதிகாரிகளை நிர்ப்பந்தித்து உபயோகப்படுத்தி வருவதாக அறிகிறேன்.

போக்கு வரத்துக்குத் தடை என்ற பெயரால் மக்களின் உரிமையில் கை வைக்கிறார்கள், என்ன போக்கு வரத்துக்குத் தடை ஏற்பட்டு விட்டது.

(10-ம் பக்கம் பார்க்க)

அதிகார கொழுப்பும்-பதவிச் செருக்கும்

அமைச்சர்கள் கண்ணை மறைக்கிறது!

நாட்டில் நடப்பதையறியாது நாவடக்கமின்றி பேசி வருகிறார்கள்!

(சம்பத் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்களின் எண்ணம் என்ன என்பதை நான் அறிவேன்!

உரிமைகளைப் பறிக்க போலீசாரின் துணைநாடுகிறார்கள்!

கூட்டம் நடைபெறும் இடங்களுக்கு வரையறை விதித்து இன்ன இடங்களில் தான் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று கூறி வருகிறார்கள்.

முன்பெல்லாம் ஒலிபெருக்கி அமைத்து 6 மைக்குகள், 6 மைக்குகள் கட்ட அனுமதித்து வந்தார்கள். இப்போது 2 மைக்கு, 3 மைக்கு கட்ட வேண்டுமென்று கூறத் தொந்திரவு செய்கிறார்கள்.

இப்படி கூறி கூட்டங்களுக்கு தொல்லை கொடுப்பதால்மக்கள் உணர்ச்சியைத் தடை படுத்தி விட முடியுமா மைக்குகள் தடைபடுத்திவிடுவதால்எங்களுக்கு என்ன நஷ்டம், லாபம்தான் 6 மைக்குகள் கட்டி தூர, தூரமாக உட்கார்வார்கள் 2 மைக்குகள் கட்டினால்அருகில் அமருகிறார்கள். அதைத் தவிர வேறு என்ன செய்து முடியும்.

ஒலிபெருக்கி வைத்துப் பேசினால்தான் மக்கள் முன் பேச முடியுமா?

ஒலிபெருக்கி இல்லாத—கூட்டங்கள் நடத்தாமல் மக்கள் சக்தியைப் பெற்றவர்கள் இல்லையா ஒலிபெருக்கி இல்லாமலேயே நாம் இதற்கு முன் பல கிளர்ச்சிகளைச் செய்திருக்கிறோம்! ஒலி பெருக்கி நமக்கு ஒரு துணைக்கருவி! ஆகவே இந்த மாதிரியான விபரீதப் போக்குகளால் நமது வளர்ச்சியை, நமது கிளர்ச்சியைத் தடுக்க காமராசரும், அவருடைய அரசினரும் நினைப்பார்களானால் அவர்களது போக்கிற்கு இரங்குகிறோம்!

இந்த மாதிரியான அடக்கு முறைகளைக் கையாண்ட பல மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணைக் கவ்வியிருப்பதை காமராசருக்கும், அவரது ஆட்சியாளருக்கும் எச்சரிக்கை செய்ய ஆசைப்படுகிறேன்!

கூட்டங்கள் நடத்துவது என்பது கொள்கை வளர்ப்பதற்காக மட்டுமல்ல மக்களுக்குப் பல நல்ல நடிவடிக்கைகளைப் புகுத்துவதுமாகும் நான் இந்தக் கூட்டத்தின் மூலம் காமராசருக்கு இன்னும் ஒரு எச்சரிக்கைசெய்ய ஆசைப்படுகிறேன்!

பண்டித நேரு நாவடக்கமின்றி பேசி தென்னகத்திலுள்ளவர்களை இழிவாகப் பேசினார். அதைக் கண்டிப்பதற்காக நாம் அவருக்குக் கருப்புக் கொடி பிடிப்பதென முடிவு செய்து அதற்காக கடற்கரையில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தோம் அலைத்துக் கடசெய்து தலைவர்களை கைது செய்தார்கள். அதனால் கருப்புக் கொடி நிகழ்ச்சி தடை பட்டு விடுமென காமராசரும் அவரது ஆட்சியாளர்களும் நினைத்தார்கள். கருப்புக் கொடிகளே நேரு கண்களுக்குத் தெரியக் கூடாதென நினைத்தார்கள் ஆனால் அன்று என்ன நடந்தது அவர்கள் நினைத்தற்குமாறாக நேருவே திகிலடையும்படி கருப்புக் கொடிகள் காட்டப்பட்டது. ஆகவே இந்தப் போராட்டமும் எங்களையெல்லாம் கைது செய்து விடுவதாலும் அடக்கு முறை கையாளுவதாலும் நின்று விடாது.

இங்குள்ள போலீசாரை வைத்து எங்களை அடித்தோ துப்பாக்கியால் சுட்டோ அடக்க நினைத்தால் அதில் வெற்றியடைய மாட்டீர்கள் வேண்டுமானால் உத்திரப் பிரதேசத்திலிருந்தோ, ஒரிசாவிலிருந்தோ, பீகாரிலிருந்தோ போலீசைக் கொண்டு வந்து எங்களை அடக்குங்கள். ராணுவத்தைக் கொண்டு வந்து எங்களை அடக்குங்கள்

அப்படியெல்லாம் செய்து விடுவதால் எங்கள் போராட்டம் நின்று விடாது!

இங்குள்ள போலீசாருக்கும் தமிழ் உணர்ச்சியும் நாட்டுப் பற்றும் இருக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள்.

இன்று நாட்டில் மிகவும் பரபரப்பான செய்திகள் நடைபெற்று வருகிறது.

கள்ள நோட்டு விஷயமாக இங்கு டலர் ஈடுபட்டு இந்த சர்க்காரை ஏமாற்றியிருக்கிறார்கள்!

அதில் இந்த மாநில அமைச்சர்களில பலரும் பங்கு கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகிறது. அதை மூடி மறைக்க ஆட்சியாளர்கள் எண்ணுவதாகத் தெரிகிறது. இன்று அதை மூடி மறைக்கலாம் என்றாவது ஒரு நாள் அங்கு வருவோம். அப்போது நாங்கள் மக்கள் முன் அம்பலப் படுத்த தான் செய்வோம். அப்போது இவர்கள் 'பதில் சொல்லித் தான் ஆக வேண்டும்! இவர்கள் இல்லா விட்டாலும் இவர்கள் சந்ததிகள் பதில் சொல்லித் தான் ஆகவேண்டும்,

சட்டத்தைத் துணை கொண்டு எங்கள் போராட்டத்தையும் உணர்ச்சியையும் அடக்கி விட எண்ணுகிறார்கள். அப்படிச் செய்தால் சட்டத்தை உடைத்து அதை மீறி போராட்டம் நடத்துவோம், அந்த சட்டத்தை உடைத் தெரிந்து உரிமையை நிலை நாட்டுவோம்.

இன்று இந்தப் போராட்டத்தில் தாய்மார்களும் பங்கு கொள்ள முன் வந்து விட்டார்கள்.

வடக்கன் குளத்திலுள்ள மகளிர் மன்றத்தார் எனக்கு வாசித்தளித்தவரவேற்பிதழில் "முன் நடந்த போராட்டத்தில் ஆண்கள் உயிர் விட்டார்கள். இந்தப் போராட்டத்தில் தாய்மார்களும் தாலமுத்து நடராஜனைப் போல் உயிர் கொடுத்து தாய் மொழியைக் காப்போம்" என்று உறுதி கொடுத்துள்ளார்கள். ஆகவே தென்னகத்து மக்கள் இன்று உள்ளக் கொதிப்போடு தாய் மொழியைக் காக்க முனைந்து விட்டார்கள். இதை ஆட்சியினர் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் போராட்டம் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல. இது ஒரு தேசியப் பிரச்சினை அதனால் போர்க் குழுவில் எல்லாக் கட்சியினரும் பங்கு கொள்ளும் வகையில் விரிவுப் படுத்தப் போகிறேன்.

ரத்தத்தில் சூடும் உணர்ச்சியும் கொண்ட மக்கள் எல்லாம் இதில் பங்கு கொள்ள முன் வர வேண்டுமென அழைக்கிறேன்.

நம்மில் பலர் இந்தப் போராட்டத்தில் இல்லாமல் போய் விடலாம்

அதனால் எல்லாம் இன்று ஏற்பட்டிருக்கும் விடுதலை உணர்ச்சி மங்கி விடாது.

காமராசர் தன்னை ஒரு பெரிய வீரம் உள்ளம் படைத்தவரென்று நினைத்து அச்சுறுத்துகிறார்! அவர் உள்ள கோழிக் குஞ்சு உள்ளம் படைத்தது என்பதை நாமறிவோம் லோகியா அறிக்கையைக் கண்டு அஞ்சி உடல் நடுங்கி மண்டியிட்டு அறிக்கை விட்டிருக்கிறார் ஓதிய மரம் போல் வளர்ந்துள்ள பச்சைத் தமிழர் காமராசர் வடநாட்டுக் காரருக்கு அடிவருடியாகி விட்டார். அப்படிப்பட்டவர் மிரட்டலுக்கு தமிழர்கள் பயப்பட மாட்டார்கள். ஆகவே நாம் நமது பொதுக் குழு முடிவின்படி போராட்டத்திற்குத் தயாராகி விட்டோம். நாம் பலாத்கார மற்ற முறையில் போராட்டம் நடத்த முற்பட்டிருக்கிறோம். ஆகவே இழந்த நம் நாட்டை மீட்கத் தயாராகும்படி கேட்டு விடை பெறுகிறேன்.

வணக்கம்

எனக்கு அரசியல் கற்றுக் கொடுக்க விரும்புகிறார் காமராசர்!

இது கண்டு உலகம் தாங்காது! உலகம் தாங்காது!

(அண்ணா பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கச் சென்றேன், பார்த்தேன். நண்பர்கள் கூறியது பொய் என்று தெரிந்து கொண்டேன். மகிழ்ந்தேன் மனைவியின் கரம் பிடித்தேன்.

அது போலத் தான் எங்கள் கூட்டத்திற்கு வாருங்கள் நாங்கள் பேசுவதையும் சொல்வதையும் கேளுங்கள் முதல் கூட்டத்தில் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் இரண்டாவது கூட்டத்திற்கு வாருங்கள் மூன்றாவது கூட்டத்திற்கு வாருங்கள் சிந்தியுங்கள். மனதுக்குப் பிடித்தால் கட்சியில் சேருங்கள், எங்களுடன் பணியாற்றுங்கள் எப்படி திருமணம் ஆவதற்கு முன் பெண்ணைப் பார்த்து மனதுக்குப் பிடித்திருந்தால் மனைவியின் கரம் பிடிப்பது போன்று உங்களுக்கு எங்கள் கொள்கைகளைப் பிடித்தால் எங்களுடன் சேருங்கள் எங்கள் கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள் உங்களை எங்களிடம் கட்டாயக் கல்யாணம் செய்யும்படி வற்புறுத்தவில்லை.

இதன் படி தான் எங்களைப் பார்த்து, எங்கள் பேச்சுக்களைக் கேட்டு சிந்தித்து எங்களுடன் சேருகிறார்கள், அதனால் எங்கள் இயக்கம் வளருகிறது. மக்கள் எங்களுடன் சேருகிறார்கள். இதைப் பார்த்து காமராசரும், மற்ற மந்திரிகளும் தாக்குகிறார்கள், கேவலமாகப் பேசுகிறார்கள் இதைப் பற்றி நாம் என்ன செய்வது.

பல நண்பர்களும் என்னிடம் வருத்தத்துடன் கூறினார்கள் காமராசரே மிகக் கேவலமாகப் பேசி வருவதாக,

நான் நமது தோழர்களுக்குக் கூறுகிறேன். அவர்கள் இழித்துப் பேசப் பேசத் நம் மக்களுக்கு ரோஷம் பிறக்கிறது. ஆத்திரம் வருகிறது நன்றாகப் பணியாற்றுகிறார்கள்.

அதனால் நான் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாடாள வந்த அமைச்சர்களே! மதியூக மந்திரிகளே! நாட்டு மக்கள் பணத்தை நாசமாக்கி ஊர் சுற்றி பவனி வரும் நல்லவர்களே.

எங்களை உங்கள் மனம் போனவாறு தாக்குங்கள், இழித்துப் பேசுங்கள், உங்கள் வாயில் என்னென்ன சொற்கள் வருமோ அந்தச் சொற்களைக் கொண்டு தூற்றுங்கள். நீங்கள் தூற்றத் தூற்றத் தான் நாங்கள் வளர்வோம், எங்கள் கொள்கைகள் வளரும் மக்களும் எங்களைப் பற்றி உணரும் சந்தர்ப்பம் வாய்க்கும் இந்த வேண்டுகோளை நிறைவேற்றும்படி அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்து விட்டது. யார் அதை ஆதரிக்கிறார்கள். என்று கேட்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் சவால் விட்டே கூறுகிறேன்.

முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்தாண்டு காலத்தில் எந்த அளவு வளர வேண்டுமோ அந்த அளவு வளர்ந்திருக்கிறது.

இந்த பத்தாண்டுகளில் மக்களின் ஆதரவை எந்தளவு பெற வேண்டுமோ அந்தளவு பெற்றிருக்கிறது.

உலக வரலாறுகளைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். உலக அரசியல் கட்சிகளில் எந்த அரசியல் கட்சியும் அடைய முடியாத பெருமளவு வளர்ச்சியை அடைந்திருக்கிறது. இந்த மாதிரி வளர்ந்த அரசியல் கட்சிகளையும் கண்டதில்லை.

நான் நமது கழகம் இந்தக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தது கண்டு மகிழ்ச்சியடையவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பின் இந்த வளர்ச்சி அடைந்திருந்தால் நான் மெத்த மகிழ்ந்திருப்பேன்.

நம்முடைய இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் "திராவிட நாடு திராவிடர்க்கே" என்பது நம்முடைய இழந்த நாட்டை ஆண்ட நாட்டைப் பெறுவது அதற்கான பணிகளில் ஈடுபட்டு இன்று நாட்டு மக்களிடையே பணியாற்றுவது.

மற்றும் இன்று நாட்டை ஆளும் சர்க்கார்-அமைச்சர்கள் செய்து வரும் குறைபாட்டையும், நாட்டு மக்களுக்குச் செய்ய தவறியவைகளையும் நாட்டில் எடுத்துச் சொல்லி வருவதும். அந்த அரசினரைத் திருத்துவதுமே முன்னேற்றக் கழகத்தின் முக்கிய நோக்கம்.

மற்றும் கழகத்திற்கு வாய்ப்பு கிடைத்தால், மக்கள் விரும்பினால் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மக்களின் நலத்திற்கான முறையில் நல்லாட்சி அமைத்துக் காட்டுவது.

இப்படிக் கூறி வருவதன் பொருள் தெரியாது பதவி ஆசைபிடித்து அலைகிறோம் என்று பறை சாற்றி வருகிறார்கள் இது நாம் கூறுவதை நன்றாக உணர்ந்து பார்க்காததால் தான் அவ்வாறு கூறுகிறார்கள்.

நாம் கூறுவது "அரசு அமைப்பது" என்பதற்கும், அரசு ஏறுவது" என்பதற்கும் பெருத்த வித்தியாசமிருக்கிறது, இதை உணர வேண்டும்.

இன்று நாட்டில் இருப்பவர்கள் "வீட்டுக்குப் போகிறேன்" என்ற சொல்லைக் கூறிவருகிறார்கள்.

சத்திரத்தில் தூங்குகிறவனும் வீட்டுக்குப் போகிறேன் என்று தான் கூறுகிறான், வாடகைக்குக் குடியிருப்பவனும்,

(12ம் பக்கம் பார்க்க)

(தலையங்கம்—2ம் பக்கத் தொடர்ச்சி)

திரியாதே! காரியத்தில் இறங்கி உன்னுடைய கலிங்கத்தைத் துடைத்துக் கொள்!

தமிழை அழித்து, தமிழ் இனத்தையும், தமிழ் இனத்தின் பெருமையையும் ஒழித்துக் கட்ட வடநாட்டு ஏகாதிபத்தியம் இந்தியை ஆட்சிமொழியாக்கி விட்டது! அதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் போர் முரசமும் கொட்டி விட்டது! ஆகஸ்டு 31ம் நாள் போராட்டம் துவங்கி வெற்றி கிட்டும் வரை—அல்லது செத்து மடியும் வரை களத்தில் நிற்க முடிவு செய்து விட்டது!

யார் யாருக்கு வீரம் இருக்கிறது, தீரமிருக்கிறது! யார் யாருக்கு தமிழ்ப் பற்று இருக்கிறது! யார் யாருக்கு சுதந்திர தாகம் இருக்கிறது என்பதை இன்னும் 51 நாட்களுக்குள் முடிவு செய்து கொள்ளுங்கள்!

"நான் தமிழன்" என்று பெருமைப் பேசுபவர்களெல்லாம் களத்திற்கு வாருங்கள்! ரத்தத்தை சிந்துங்கள் அதன் மூலம் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள, திராவிட நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைக் கழுவுங்கள்!

இந்தப் போராட்டம்—உங்களுக்கு தியாகி பட்டங்களைக் கொடுத்து, மந்திரி பதவியில் உட்கார வைக்கும் போராட்டமல்ல!

தந்திக்கம்பிகளை அறுத்துப் பழக்கப்பட்டவர்கள், தபால் நிலையங்களை கொளுத்திப் பக்குவப்பட்டவர்கள், ரயிலை சேதப்படுத்தி நாசம் விளைவித்தவர்கள் யாருக்கும் இங்கு இடமில்லை!

எங்கள் மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல் சுட்டால் ஓடக் கூடாது—அப்படியே படுத்துவிட வேண்டும்! அந்தவைர நெஞ்சம் படைத்தவர்கள் தான் இங்கு வர வேண்டும்!

போலீஸ்காரர்கள் அடித்தால்—அடியை வாங்கிக் கொள்ள வேண்டும்! அவர்கள் மீது கோபப்படவோ, ஆத்திரப்படவோ கூடாது! போலீஸ்காரர்கள் அதிகாரிகள் – ஆட்சியாளர்கள் அல்ல!

இன்றைய தினம் நம்மை அடித்து மண்டையை உடைக்கின்ற போலீஸ்காரர்களில் பலர் காமராஜரையும் அடித்திருக்கிறார்கள், கக்கனையும் அடித்திருக்கிறார்கள், பக்தவத்சலத்தையும் அடித்திருக்கிறார்கள்! இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்! நாளைய தினம் நாமும் போலீஸ்காரர்களுக்கு உத்தரவிடுகின்ற நிலை உண்டாகும்! அப்போதும் அவர்கள் தங்கள் கடமையை செய்வார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல்

இரண்டு கரங்களோடு வருவீர்கள்—ஒரு கரத்தை
இழந்து செல்வீர்கள்!
இரண்டு கால்களோடு வருவீர்கள்-நொண்டியாகத்
திரும்பிச் செல்வீர்கள்!
இரண்டு கண்களோடு வருவீர்கள்-ஒரு கண்ணை
இழந்து செல்வீர்கள்!

அந்தி தியாகத் தீயில் குதிக்க ஏராளமானவர்கள் உண்டு—ஏராளமானவர்கள் என்றால் ஒரு ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர்களல்ல—ஒரு இரண்டு இலட்சம் மூன்று இலட்சம் உயிரையும் தத்தம் கொடுக்கும் வீரர்கள் உண்டு!

அந்தப் பெருமை தரும் புனித நாள் இன்னும் தொலைவில் இல்லை-இடையிலே இருப்பது 51 நாட்கள் தான்! இன்னும் 51 நாட்கள் முடிந்து விட்டால் ஆகஸ்டு 31 வந்துவிடும்! அன்றைய தினம் தியாகப் புரிக்குப் புறப்பட எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு தயாராக இருங்கள்!

★

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone 83285
இலங்கையில் 20 சதம்

அரசு ஏற்க நாம் விரும்பவில்லை—அரசு அமைக்கவே நாம் விரும்புகிறோம்!

இதை அறியாது நம் மீது குறை கூறுகிறார்கள் !

[அண்ணா பேச்சு)
[11ம் பக்கத் தொடர்ச்சி]

வீட்டுக்குப் போகிறேன் என்று கூறுகிறான், சொந்த வீட்டுக்காரனும் வீட்டுக்குப் போகிறேன் என்று கூறுகிறான்.

நாம் சொல்லுகின்ற அரசு அமைப்பது என்பது சொந்த வீட்டுக்காரன் சொல்வது போன்ற பொருள்.

அரசு ஏறுவது என்பது வாடகைக்குக் குடியிருப்பவன் கூறுவதுபோன்ற பொருள்.

தமிழகம் இன்று வாடகை வீடு போல் இருக்கிறது. ஏதோ சூழ்ச்சியால் அது இன்று வட நாட்டு ஆதிக்க வெறியர்களிடம் சிக்கி இருக்கிறது.

இது நமது வீடு. பழம் பெருமை வாய்ந்த வீடு. சீரும் சிறப்புடனிருந்த வீடு, இந்த வீட்டில் முன் இருந்தவர்களெல்லாம் சிறப்புடன் வாழ்ந்தார்கள் இன்று கொஞ்சம் ஓட்டையாகத் தான் இருக்கிறது; காரைப் பூச்சுச் சரியாக இல்லாது தான் இருக்கிறது. இருந்தாலும் இது உன்னுடைய பாட்டன், முப்பாட்டன் வளமுடன் வாழ்ந்திருந்த வீடு, இது உனக்குச் சொந்தமான வீடு, இன்று வேறொருவர் கையில் சிக்கி இருக்கிறது

இந்த வீட்டைப்பற்றித் தவறாக யாராவது பேசினால் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டுமா?

நம் பக்கத்து வீட்டில் குடியிருப்பவன் நம்மைப்பார்த்து 'உன் மனைவி நன்றாக இல்லை, கருப்பாக இருக்கிறது' என்று கூறுவானானால், நாம் சும்மா இருப்போமா? உடனே அவனைப் பார்த்து நாம் கேட்கமாட்டோமா?

"உன் குரங்கு மூஞ்சி மனைவியைவிட என் மனைவி ஒன்றும் அழகு குறைந்தவரல்ல" என்று சொல்ல மாட்டோமா?

நான் இப்படிக் கூறுவதால் காங்கிரஸ் காரர்கள் உடனே கூற ஆரம்பிப்பார்கள்

"பார், பார் இந்த அண்ணாதுரையை, எப்பொழுதும் பெண்களைப்பற்றிய உதாரணத்தையே சொல்கிறான். இவனுக்கு வேறொன்றும் தெரியாது என்பார்கள்

நான் இப்படிக் கூறுவது என்னுடைய தோழர்களுக்கு, மனைவி மக்களுடன் நன்முறையில் குடும்பம் நடத்துவோருக்கு— இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்தும் நாட்டுமக்களுக்குக் கூறுகிறேன்

முற்றும் துறந்தவர்களென்று சொல்லிக் கொள்கிறவர்களுக்கோ, இன்று காங்கிரசில் இருந்து வருகின்ற கட்டைப் பிரம்மச்சாரிகளுக்கோ சொல்ல வரவில்லை.

"தமிழன் என்றொரு இனம் உண்டு. அவனுக்குத் தனியே ஓர் குணம் உண்டு" என்று உங்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பாடி இருக்கிறாரே அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அவர் "இந்தியன் என்றொரு இனம் உண்டு, அவனுக்கு இனிமையான குணம் உண்டு என்று பாடவில்லை

அதற்குக் காரணம் தமிழன் என்றும் தனிச் சிறப்புப் பெற்றவன்

தமிழன் வரலாற்றுப் புகழ் படைத்தவன் அவன் யாருடைய தயவுமின்றி வாழ்ந்தவன்

அப்படிப்பட்ட தமிழன் ஏன் இன்று வடநாட்டுக்காரனோடு சேர்ந்திருக்க வேண்டும்?

வட நாட்டுக் காரனுக்கும், நமக்கும் எந்த வித ஒட்டுமில்லை, உறவுமில்லை. எல்லாவிதத்திலும் அவனும், நாமும் வேறுபட்டிருக்கிறோம் அவனுடைய பண்பு வேறு, நாகரீகம் வேறு, கலை வேறு, கலாச்சாரம், உணவு, உடையாவும் வேறு பட்டவை அப்படி இருக்கும்போது நாமும் அவனும் எப்படி ஒன்றாக இருக்க முடியும். வெள்ளைக்காரன் எப்படி நமக்கு அன்னியனோ அதே போன்று தான் வடநாட்டுக்காரனும் நமக்கு அன்னியன் தான்

எல்லாவற்றிலும் வேறுபட்டு மாறுபாடுடைய நாம் அவனது ஆட்சியை மட்டும் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்

நாம் சாலையிலே நடந்து சென்று கொண்டிருக்கிறோம் நம்முடைய கையிலிருக்கின்ற ஒரு அணா கீழே விழுந்து விட்டால் அதைத் தேடிக் கண்டு பிடித்து எடுத்து விடுகின்றோம். அதே போன்று அந்த ஒரு அணா சாக்கடையில் விழுந்து விட்டால் அதை நாம் எடுப்பதில்லை, 'ஒரு அணா தானே போனால் போகிறது'' என்று விட்டு விடுகிறோம் அதே போல் நம் விரலிலிருந்து வைர மோதிரம் தவறி சாக்கடையில் விழுந்து விட்டால் நாம் விட்டு விடுவதில்லை, எப்படியும் தேடிக் கண்டு பிடித்து எடுக்க முயற்சி செய்கிறோம்

இன்னும் மாமியார் வீட்டில் கொடுத்த மோதிரமாக இருந்தால்—முதல் நாள் சந்திப்பில் தன் ஆசை மனைவி நாணத்தோடு கண் ஓரப்பார்வையினால் அன்போடு விரலில் அணிந்த மோதிரமாக இருந்தால்—' இந்த மோதிரத்தை எப்பொழுதுமே விரலிலிருந்து கழற்றக் கூடாது என்று மனைவி அன்புக் கட்டளையிட்டு இருந்தால் சாக்கடையல்ல வேறு எதிலுமிறங்கித் தேட தயங்க மாட்டோம் அது போல் தான் இன்று வட நாட்டு ஏகாதிபத்திய வெறியன் நம்முடைய மானம் பறிபோகும் வகையில் நமது நாட்டை—நமது தாய் மொழியை அழிக்க, ஒழிக்க முற்பட்டிருக்கிறான். அதை எதிர்த்து போரிட நாம் தயங்கலாமா? சிந்தித்துப் பாருங்கள்

வீர மரபில் தோன்றிய திராவிடத் தோழர்களே தாய்மார்களே இன்று நம்முடைய போர்! போர்!! போர்!!! என்ற முழக்கம் தோன்றி இருக்கிறது. அந்தப் போரில் ஈடுபட வாரீர்! வாரீர்! வாரீர்!!! என்று உங்களை நான் அழைக்கிறேன்

வட நாட்டு மொழியான இந்தி மொழி தென்னகத்தில் புகுந்து அரசோச்சப் பார்க்கிறது "நாட்டு மொழியைக்காக்க வீட்டுக்கொருவர் வாருங்கள் இந்தப் போரில் ஈடுபடுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

இந்தப்போர் இந்தியை எதிர்க்கின்ற வீரப்போர் நம் மானத்தைக் காக்கும் போர் நமது பண்பை நமது கலையை பாதுகாக்கும் போர் இதில் தமிழர்களெல்லாம் ஒன்றுபட வேண்டுமென்று அழைக்கிறேன்

வட நாட்டு மொழி வெறியர்கள் புகுத்தி இருக்கும் இந்த இந்தியை ஒழிப்பது எளிதான காரியமல்ல சாமானிய மான முறையில் இதை ஓட்டிவிட முடியாது. நம் இரத்தத்தைச் சிந்தி, நம் உயிரை பணயம் வைத்து போராடத்தயாராக வேண்டும்

இந்தப் போராட்டத்தில் ஐம்பதாயிரம் பேருக்கு மேல் சிறை செல்வதற்கும் இந்த ஆட்சியாளர் நம்மீதும் எடுக்கப் போகும் அடக்கு முறைகளைத் தாங்குவதற்கும் சுமார் நூறுபேர்களுக்கு மேல் பிணமாவதற்கும் தயாராக இருக்க வேண்டும்

எப்படிம்பட்ட இன்னல்களும் தொல்லைகளும் ஏற்பட்டாலும் அதைத் தாங்குகின்ற இதயங்கள்—உள்ளங்கள் இருக்கின்றது என்பதை இந்த அதிகரா வெறி பிடித்த ஆட்சியாளருக்குக் காட்டியாக வேண்டும்

நாம் பலாத்காரத்திலோ, காலித்தனத்திலோ, கலவரத்திலோ நாம் இறங்கப் போவதில்லை ஆட்சியாளரின் துப்பாக்கி வெடிகளுக்கு பலியாகி இறத்த வெள்ளத்தில் நீந்துவோம் என்பதைக் காட்டியாக வேண்டும்

நான் இங்கு கூடியிருக்கின்ற உங்கள் முகங்களைப் பார்க்கின்றேன், உங்களுக்கு இருக்கும் ஆர்வமும் எனக்குத் தெரிகிறது உங்கள் கண்களிலே காணுகின்ற வீரத்தையும் பர பரப்பையும் நான் உணர்கிறேன். உங்கள் முகங்களிலெல்லாம் விடுதலை வேட்கை தாண்டவமாடுவதைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன், நீங்கள் எதற்கும் தயாராக இருக்கிறீர்கள் என்பதை உங்கள் செயல்கள் எனக்குக் காட்டுகிறது. நீங்கள் போராட்டத்தில் பின் வாங்க மாட்டீர்கள் உங்களைத் தயார் செய்து கொண்டீர்கள் என்பதை நானறிந்து இருக்கிறேன்.

இந்தத் தஞ்சைத் தரணியிலே சுற்றி வந்த உயர்ந்த பதவியிலே வீற்றிருக்கும் ஒரு பெரிய மனிதர் சொன்னாராம் தோட்டாக்கள் என்னிடம் இருக்கிறது கவனமிருக்கட்டும் என்று,

அந்தப் பெரிய மனிதருக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். "பதவியிலிருக்கின்ற பெரிய மனிதரே தோட்டாக்கள் உங்களிடமிருக்கிறது. என்பது எங்களுக்குத் தெரியும். அதே போன்று அதைத் தாங்குகின்ற இதயங்கள் எங்களிடமிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்"

தோட்டாக்கள் அதிகமா அதைத் தாங்குகின்ற இதயங்கள் அதிகமா என்பதை ஆகஸ்ட் முப்பத்தி ஒண்ணாம் தேதி பார்த்துக் கொள்ளுங்கள்.

நம்முடைய மாநில முதலமைச்சர் காமராசர் கொஞ்சம் நாவடக்கத்தோடுப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் கூட்டங்களில் பண்பிழந்து நாகரீகமற்ற முறையில் பேசி வருவதாக எனக்குச் செய்தி வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தோழர்கள் பலர் என்னிடம் வருத்தத்தோடு கூறினர்.

நம்மைப் பற்றி கூட்டங்களில் பேசும் போது முன்பெல்லாம் "அவர், இவர்" என்று பேசி வந்தார். இன்று அவன், இவன் என்று பே ஆரம்பித்து விட்டார். அவர் இன்று அந்த நிலைமைக்கு வளர்ந்து இருக்கிறார்.

காமராசர் ஒரு கூட்டத்தில் சொன்னாராம் "அரசியலைப் பற்றி இவனுக்கு என்ன தெரியும்" என்று என்னைக் கேட்டாராம். இது எனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது இவர் தன்னை ஒரு பெரிய அரசியல் மேதை என்று நினைத்துக் கொண்டு இப்படி பேசியிருக்கிறார்,

முதலமைச்சர் காமராசர் தன்னை ஐ. நா. சபையில் பத்தாண்டு காலம் அரசியல் பயின்ற மேதாவி என்று நினைத்துக் கொண்டாரா, அல்லது இங்கிலாந்திலுள்ள பிரிட்டன் முதலமைச்சா மாக்மில்லனுக்கு அரசியல் பாடம் கற்பித்தவரென்று எண்ணிக் கொண்டிருக்கிறாரா? அல்லது உலக மெல்லாம் நடுங்கும் படியான நிலையில் உண்டாக்கி யிருக்கும் ரஷ்யாவின் பிரதமர் குருசேவுக்கு உலக விவகாரங்களைக் கற்றுக் கொடுத்தவர் என்று கருது

(7ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,:
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.